அப்துல் பொருட்கள் வாங்க கடைக்கு சென்றான்

IndiSciCovid
கோவிட்-19: இந்திய விஞ்ஞானிகளின் பதில்
https://indscicov.in/
Illustrations by: Suneha Mohanty

Indian Scientists' Response to COVID-19

அப்துல பதட்டத்துடன் எழுந்தான். அய்யோ! அஜித் சாரோட க்ளாஸுக்கு இன்னைக்கும் லேட் தானா! கண்டிப்பா என்ன எக்ஸாம் எழுத விடமாட்டார்!

பின்பு தூக்ககலக்கத்தில் ஊரடங்கு அவனுக்கு நினைவுக்கு வந்தது; காலேஜ் மூடப்பட்டு தற்போது தன்னுடைய பெற்றோர்களின் வீட்டில் இருக்கிறான். மீண்டும் தூங்குவதற்கு முயற்சித்தான். ஒரு அறையே கொண்ட அந்த வீட்டில் சரூராக வேலைகள் நடந்து கொண்டிருந்தன – அவனுடைய அம்மா டீ வைக்கவும், பாட்டி ஊசி நூலால் தைக்க, அப்பா நமாஸ் செய்து கொண்டிருந்தார். இதற்கு நடுவில் தூங்கவதற்கு பதிலாக எழுந்தே விடலாம் என்று எண்ணிக்கொண்டான்!

பல் விலக்கிக் கொண்டிருக்கும் போது, சதீஷுடன் மட்டுமே பகிர்ந்து கொண்ட காலேஜ் ஹாஸ்டல் அறையின் நினைவாகவே இருந்தான் – பெற்றோர்களின் வீட்டு அறையை விட சிறிதளவு பெரிதாக இருக்கும் அது. அவனுடைய நண்பர்களுடன் டீக்கடையில் நிகழ்ந்த முடிவில்லா அரசியல் விவாதங்களை யோசித்து பார்த்தான். மேலும், கல்லூரியில் உணர்ந்த சுதந்திரத்தை நினைத்து கொண்டான். மூன்று வாரங்களுக்கு முன்பே கல்லூரிகளை மூடிவிட்டனர். கூட்ட நெரிசலான இரண்டு இரயில் பயணங்களை மேற்கொண்டு, பின்னர் மூன்று மணி நேரம் ஜீப்பில் வந்து அவனுடைய வீட்டை அடைந்தான்! குடும்பத்தில் அனைவருக்கும் மூன்று நாட்கள் பதட்டமானதாக இருந்தது. அப்துல் வீட்டிற்கு நல்ல படியாக வந்து சேர்ந்ததை நினைத்து சந்தோசபட்டு கொண்டான்.

”அப்துல் நேரத்த பாத்தியா இல்லையா. மார்கெட்டிலிருந்து மட்டனும் தக்காளியும் வாங்கிட்டு வர சொன்னேன்ல. சீக்கிரம் வாங்கிட்டு வா! கடையெல்லாம் மூடிருவாங்க.” என்று அம்மா சத்தமாக கூறினாள். ”கவனமாக இரு. முகக்கவசத்தை அணிந்து கொள். எதையும் தொடாதே. மற்றவர்களிடமிருந்து தூரமாக இரு…” என்ற முன்னெச்சரிக்கைகள் மற்றும் அறிவுரைகளை பட்டியலிட்டார்.

”BP மருந்து காலியாக போது. மருந்துக்கடைல ஸ்டாக் வந்துருச்சானு பாத்துட்டு வரியா?” என்று அவன் தாத்தா கேட்டார்.

“சரி சரி, போறேன். நாளைக்கு முடியாது ஆனா . ஏன் இன்னும் வர இரண்டு நாளும். வேணுங்கறதா இப்பவே சொல்லீருங்க!” என்று அப்துல் பதிலளித்தான்.

“டேய், இன்னைக்கு நியூஸ் பேப்பர் வாங்கீட்டு வறியா? முடிந்தச்சுனா நாளைக்கிதும் சேத்து வாங்கீரு!” தனக்கே உரிய நக்கலுடன் அப்துலின் அப்பா கூறினார். இதற்கு பாட்டி உட்பட அனைவரும் எதோ முனங்கிகொண்டனர். ஆனால், அவரின் நய்யாண்டி பேச்சு தான் இந்த லாக்டவுன் சூழ்நிலையை சற்று சாதாரணமானதாக உணர வைக்கிறது என்பதை அறிந்திருந்தனர்.

அப்துலின் அக்காள் வெளிநாட்டில் வசித்தாள். ஆனால், ஒவ்வொரு இரவும் ஃபோன் செய்து புது அறிவுரைகளை குடும்பத்தினருக்கு அளித்திடுவாள். அத்தியாவசிய பொருட்களை வாங்க அப்துல் தான் செல்ல வேண்டுமென்பது அவளுடைய முடிவு தான். “வயதானவர்கள் வெளியே செல்வது ஆபத்தானது” என்பதுடன், “நீ வீட்டில் வேறெதும் வேலையாக இல்லையே” என்றும் கூறியிருந்தாள். முகக்கவசம் அணியவும் அவனுக்கு அறிவுறித்தினாள்.

பழைய துப்பட்டாவில் தைக்கப்பட்டிருந்த முகக்கவசம் ஒன்றை அப்துல் எடுத்துக்கொண்டான். "வெளிய போறதுக்கு அந்த கதவுக்கு பக்கத்துல இருக்க சால்வைய எடுத்துட்டு போ." என்று அவன் அம்மா கெஞ்சினாள். "வெயில் பயங்கரமா இருக்குமா! அது வேணா எனக்கு. வீட்டுக்கு வந்தோனே போட்ட துணிய துவைச்சிருறேன்." என்று சொல்லிவிட்டு அப்துல் காலணிகளை அணிந்து கொண்டு வெளியே சென்றான்.

மருந்துக்கடை மற்றும் காய்கறிக்கடை இரண்டிலும், சுண்ணாம்பால் குறிக்கப்பட்ட வட்ட குறயீட்டு ஒன்றில் வரிசையில் காத்திருந்தான் அப்துல். ஃபோனில் அன்லிமிட்டட் பாக் போட்டிருந்தது நன்றாக போனது – வரிசையில் காத்திருக்கும் போது பழைய நண்பர்களுடனாவது பேசிக்கொள்ளலாம்.

இறுதியாக கறிக்கடையிற்கு சென்றான். அந்தச் சமயத்தில் கடையில் கூட்டம் இருப்பதாக தெரியவில்லை. மட்டன் வெட்டிக்கொண்டிருந்த கரீம் பாய், கடையின் பின்னிருந்து அப்துலுடன் சத்தமாக பேசினார்: "எல்லாரும் வீட்டில நல்லா இருக்காங்களா?" "எப்ப இந்த லாக்டவுன் முடியும்னு நனைக்குற? நியூஸ் எல்லாம் மொபைலுக்கே வந்துரும்லா? என்ன சொல்றாங்க இன்னைக்கு?" அப்துல் தன் மொபைலை உள்ளே வைத்துக் கொண்டான். வீட்டில் இல்லாத ஒருவருடன் பேசுவது புத்துணர்வாக இருந்தது. ஆம், தூரத்தில் இருந்து தான் பேசினார், முகக்கவத்தில் குரல் கூட சரியாக கேட்கவில்லை. "ஓ, வீட்டுல எல்லாரும் நல்லா இருக்காங்க. கொஞ்சம் பயமிருக்கு, வேறொன்னும் இல்ல. லாக்டவுன் பத்தி தெளிவா தெரியல பாய்! இன்னும் கொஞ்ச நாளுக்கு இழுக்குற மாறி தான் தெரியுது. என்ன ப்ளான்னு சரியா தெரில!" என்று அப்துல் பதிலளித்தான். சிறிது நேரம் அங்கு காத்திருந்து தற்போதைய பொருளாதர நிலவரத்தை பற்றி கரீம் பாயுடன் பேசிவிட்டு வீடு திரும்பினான்.



சிறு குவளையில் தண்ணீர், சோப்பு, மற்றும் ஒரு காய்ந்த துணி ஆகியவற்றை வீட்டின் கதவிற்கு வெளியே வைத்திருந்தாள் அவனின் அம்மா. செருப்பை கழற்றி விட்டு, கைகளை கழுவிவிட்டு துடைத்துக்கொண்டான். பின்னர், துணியை சோப்பு தண்ணீரில் முக்கியெடுத்து மருந்துகள் இருந்த அட்டைபெட்டியை துடைத்தான். மேலும், அவனின் மொபைலை துடைப்பதற்கென்று சுத்தமான கைக்குட்டை மற்றும் கை சுத்திகரிப்பானை அங்கே வைத்திருந்தாள். போன முறை வெளியே சென்று வந்த பின்னர் இதை செய்யாமல் இருந்ததற்கு அம்மா அவனை நன்றாக திட்டியிருந்தாள். மொபைலையே அவனிடமிருந்து பறிமுதல் செய்து விடுவதாகவும் மிரட்டியிருந்தாள்.

உள்ளே சென்று, மட்டன் மற்றும் காய்கறிகளை அம்மாவிடம் கொடுத்தான். நன்றாக கழுவிய பின்னர் ஃபிர்ட்ஜிற்குள் அவற்றை வைத்தாள். மருந்து பெட்டியை ஒரு டேபிளில் வைத்துவிட்டு குளிக்க மற்றும் முகக்கவத்தையும் அணிந்திருந்த துணிகளையும் துவைக்க சென்று விட்டான்.

அப்துல் பின்னர் டேபிளில் இருந்த மருந்து பெட்டியை திறந்து அதிலுள்ள மாத்திரைகளை ஒரு கண்ணாடி பாட்டிலுக்கு மாற்றினான். அவனின் பாட்டி மிகவும் வயதானவர் என்பதால் CoVID-19 தொற்றிக்கொள்ளுமோ என்று பயந்திருந்தார். எச்சரிக்கையாக இருக்கும் பொருட்டு, தன் கைகளை கழுவிவிட்டு வைரஸ்கள் இல்லாததை உறுதிசெய்ய பாட்டிலின் வெளி பகுதியையும் சோப்பால் கழுவினான். இதன் பின்னரே அவரிடம் பாட்டிலை கொடுத்தான்: "இந்தாங்க பாட்டி உங்க மருந்து. கடைக்கு நேத்து ஸ்டாக் வந்துருக்கு."

அவர்கள் குடியிருப்பில் அனைவருக்கும் பொதுவான பால்கனியில் துணிகளை காய வைக்கும் போது தான், அப்பாவிற்கு நியூஸ்பேப்பர் வாங்க மறந்துவிட்டதை உணர்ந்தான். பரவாயில்லை, நாள்தோறும் இதை குறித்த அவரின் நக்கல் பேச்சை ரசிக்கலாம் என்று எண்ணிக்கொண்டான்.

இக்கதைகள் வழக்கமான காட்சிகளை சித்திரிக்கின்றன , இங்குள்ள தகவல்களை சூழலில் பொருந்துகின்றன. இவ்வாறு செய்யும் போது எளிமைப்படுதலை தவிர்க்க இயலாது. எங்கள் இணையத்தளத்திலுள்ள பிற அறிவியல் தகவல்களோடு சேர்த்து கருதவும்.